## DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI
## OS No. 24/2019

**2024**ம் வருடம் ஜனவரி திங்கள் 29ம் நாள் பிரதிவாதி தரப்பில் 2வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.முருகேசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : செந்துாரான் கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.8 ஆவணத்திற்கு முன்பு உள்ள ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.8 யூ.டி.ஆர் பட்டா உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

2. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.9 ஆவணமானது 1, 3 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.10 முதல் 13 வரையிலான ஆவணங்கள் இந்த 1,3 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.14 ன் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் மேல்நடவடிக்கை தள்ளுபடி ஆகிவிட்டது. பொதுவாக பட்டா மாறுதல் சம்மந்தமாக புகாரினை வருவாய் கோட்டாட்சியரிடம் தான் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக போலியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் தாவாச் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் தாவாச்சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல.